
# Awareness Rally (12.01.2022)



## விழிப்புணர்வு பேரணி

**உடுமலை, ஜன. 12–**

உடுமலை அருகே, மழை நீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணியை, கல்லூரி மாணவியர் நடத்தினர்.

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியின் நாட்டு நலப் பணி திட்டம் சார்பில், வாளவாடி, தீபாலப்பட்டி, ஜே.என்., பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் முகாம் நடந்து வருகிறது.

என்.எஸ்.எஸ்., மாணவியர், மழைநீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்தினர். மேலும், அரசு பள்ளி மாணவ. மாணவியருக்கு கவிதை, கட்டுரை, ஓவியம், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும், அரசு பள்ளி வளாகங்கள், பொது இடங்களிலும் தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டது.

# Cooking Gas Demonstration Training Camp (11.01.2022)




வாளவாடியில்

## சமையல் எரிவாயு செயல் விளக்க பயிற்சி முகாம்

போடிப்பட்டி, ஜன.11- உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் பெரிய வாளவாடி கிராமத்தில் நடைபெற்று வருகிறது. முகாமில் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் வினியோகஸ்தரான செல்வி கியாஸ் ஏஜென்சிஸ் சார்பாக சமையல் எரிவாயு பாதுகாப்பு மற்றும் செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. முகாமுக்கு பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் கோவை மண்டலத்தின் துணை மேலாளர் அபிஜித் பி.விஜய் தலைமை தாங்கினார். உடுமலை பாரத் கியாஸ் வினியோகஸ்தரான செல்வி கியாஸ் ஏஜென்சியின் உரிமையாளர் அய்யப்பன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஸ்ரீபிரியா வரவேற்றுப் பேசினார். திட்ட அலுவலர்கள் சிரஞ்சீவி, கீதா, விஜயா, துணைத்திட்ட அலுவலர்கள் மற்றும் கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் பொறுப்பாளர் மெஹர் பானு, நாட்டு நலப்பணித் திட்டத்தின் தன்னார்வலர்கள் மற்றும் ஊர்ப்பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் துணை மேலாளர் பேசியபோது "வாடிக்கையாளர்கள் எவ்வித சிரமமின்றி எளிய முறையில் பதிவுசெய்து ஆன்லைன் முறையில் பணத்தை எளிதான முறையில் செலுத்தி சிலிண்டர்களை பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்கள் செய்யக்கூடிய சிறு குறைகள் பெரும் விபத்துக்களை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் எரிவாயுவில் பொருத்தப்பட்டுள்ள ரப்பர் குழாயை மாற்றி விட வேண்டும்." என்றார்.

மேலும் பாரத் கியாஸ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரும் சேவைகள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியின் முடிவில் ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவி நன்றி கூறினார்.

# Art Festival (13.01.2022)

## ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி கல்லூரியில் கலைச்சாரல் விழா

உடுமலை, ஜன. 13: உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் அனைத்து பள்ளி மாணவர்களுக்கான கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் கலைச்சாரல்-2023 கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ணப்பிரசாத் முன்னிலை வகித்தார். தமிழ்த்துறை சுயநிதி பிரிவு தலைவர் பிருந்தா வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் ராஜேஸ்வரி தலைமை வகித்தார். கல்லூரியின் ஆலோசகர் மற்றும் இயக்குநர் மஞ்சுளா தொடக்க உரையாற்றினார்.



ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி கல்லூரியில் கலைச்சாரல் விழா நடந்தது.

20க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். சுவரொட்டி தயாரித்தல், இணைப்பு விளையாட்டு, ரங்கோலி, ஓவியம், தனிநபர் நடனம், குழு நடனம், விநாடி வினா, பாட்டு, மெஹந்தி மற்றும் பேச்சு போட்டி போன்ற போட்டிகளும் பந்து எறிதல், மேசைப்பந்து, இறகுப்பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வணிக மேலாண்மை மற்றும் கணிப்பொறிப் பயன்பாட்டுத் துறைத்தலைவர் உமா மகேஸ்வரி வரவேற்றார். தங்களது கலைத் திறமையையும் விளையாட்டுத்திறனையும் வெளிப்படுத்தி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு முதல் மூன்று பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அதிக அளவில் போட்டிகளில் பங்கேற்று ஸ்ரீ விசாலாட்சி மகளிர் கல்லூரி சிறப்புக் கோப்பையைத் தட்டிச் சென்றது. கணினி பயன்பாட்டுத்துறை தலைவர் மணிமேகலை நன்றி கூறினார்.

# Pilgrims wear "Luminous Stickers"(1.02.2022)

## பாத யாத்திரை செல்லும் பக்தர்கள் உடையில் 'ஒளிரும் ஸ்டிக்கர்'

உடுமலை, பிப்.1: மடத்துக்குளம் பகுதியில் உள்ள திண்டுக்கல் கோவை தேசிய நெடுஞ்சாலை வழியே, தினந்தோறும் நூற்றுக்கணக்கான முருக பக்தர்கள் பழனிக்கு பாதயாத்திரை செல்கின்றனர். இந்நிலையில், முருக பக்தர்களின் நலன் கருதி ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட குழு மாணவிகள் மற்றும் டாக்டர் அப்துல் கலாம் மக்கள் பாதுகாப்பு சேவை அறக்கட்டளையினர் இணைந்து, பழனிக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு, இரவு நேரங்களில் 'ஒளிரும் ஸ்டிக்கர்'களை சட்டைகளில் ஒட்டினர். மேலும் இதன்மூலம் விபத்துக்களை தடுக்க



▸ பாதயாத்திரை செல்லும் பக்தர்களின் உடையில் ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டும் கல்லூரி மாணவிகள்.

முடியும் என தெரிவித்தனர். இதையடுத்து ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட முருக பக்தர்கள் தங்களது பாதயாத்திரையை அச்சமின்றி நிம்மதியுடன் தொடர்ந்து மேற்கொண்டனர். முன்னதாக, மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு நன்றி தெரிவித்தனர்.

# Seminar on Leadership Skills (8.02.2022)

## தலைமை பண்பு குறித்த கருத்தரங்கம்

**உடுமலை, பிப். 8–**

உடுமலை ஜி.வி.ஜி., கலையரங்கில், பெண்களுக்கான தலைமை பண்பு குறித்த கருத்தரங்கம் நடந்தது.

உடுமலை தேஜஸ் ரோட்டரி, ராஜலட்சுமி கெங்குசாமி அறக்கட்டளை மற்றும் ரோட்டரி சங்கங்கள் இணைந்து 'யாதுமானவள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியது. பேச்சாளர் ஜெயந்திஸ்ரீ, தலைமை பண்புகளும் பெண்களுக்கான தனித்துவம் குறித்தும் பேசினார். கமலம் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பிருந்தா முன்னிலை வகித்தார்.

இதில், கல்லூரியின் மாணவியர், பேராசிரியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# Achievement of HockeyTeam (11.02.2022)

## ஹாக்கி போட்டியில் கல்லூரி அணிகள் அசத்தல்

**உடுமலை, பிப். 11-**

உடுமலையில் நடந்த முதல்வர் கோப்பைக்கான ஹாக்கி போட்டியில், மாணவியர் பிரிவில், ஜி.வி.ஜி., கல்லூரி முதலிடம் பிடித்தது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருப்பூர் மாவட்ட விளையாட்டு பிரிவு சார்பில், முதல்வர் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டி, உடுமலை நேதாஜி மைதானத்தில் நடந்தது.

மாவட்டத்திலுள்ளபல்வேறுகல்லூரி அணிகள் பங்கேற்றன. இப்போட்டியில், மாணவர் பிரிவில், 4 அணிகளும், மாணவியர் பிரிவில், 5 அணிகளும் கலந்து கொண்டன.

மாணவர் பிரிவில், இறுதிப்போட்டியில், உடுமலை வித்யாசாகர் கல்லூரி அணி முதலிடமும், திருப்பூர் சிக்கன்னா அரசுக்கல்லூரி, இரண்டாமிடமும், காங்கேயம் பில்டர்ஸ் அசோசியேஷன் கல்லூரி மூன்றாடமிடமும் பிடித்து.

மாணவியர் பிரிவில், ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரி முதலிடம், திருப்பூர் சிக்கண்ணா கலைக் கல்லூரி இரண்டாமிடம், வித்யாசாகர் கலைக் கல்லூரி மூன்றாம் இடமும் பிடித்தன.

# ORGANIZING TAMIL EXHIBITION IN GOVERNMENT SCHOOL (16.02.2022)

## அரசுப்பள்ளியில் தமிழ்க்கண்காட்சி நடத்தி அசத்திய மாணவர்கள்

போடிப்பட்டி, பிப்.16- குடிமங்கலம் ஒன்றியம் சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தமிழ்க்கண்காட்சி நடத்தி மாணவர்கள் அசதியுள்ளனர்.

### தமிழ் ஆர்வம்

குடிமங்கலம் ஒன்றியம் சோமவாரப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளது. பள்ளியின் தலைமை ஆசிரியர் கோப்பெருந்தேவி தமிழார்வம் மிக்கவர். அவருடைய தமிழார்வத்துக்கு தமிழ்க் கண்காட்சியை சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகத்தில் நடத்தி அசத்தியுள்ளனர். இந்த கண்காட்சியை பொள்ளாச்சி சண்முகசுந்தரம் எம்.பி., தொடங்கிவைத்தார்: இந்த கண்காட்சியை சுற்றுவட்டார பகுதி பள்ளி மாணவ -மாணவிகள் மற்றும் உடுமலை அரசு கலைக் கல்லூரி, ஜி.வி.ஜி மகளிர் கல்லூரி மாணவிகள் என ஏராளமானவர்கள் கண்காட்சியை கண்டு ரசித்தனர். மாணவர்களின் படைப்புத் திறனைக் கண்டு ரசித்த மாணவிகள் ஆங்காங்கே நின்று செல்பி எடுத்ததுடன், தங்களது செல்போன்களில் கண்காட்சியின் சிறப்புகளை பதிவு செய்தனர்.


### பாரம்பரிய கலைகள்

தமிழுக்கான இந்த கண்காட்சியில் நாம் மறந்து போன நுங்கு வண்டி, கில்லி தாண்டு, பன்னாங்கல், பல்லாங்குழி, பச்சக் குதிரை போன்ற பல பாரம்பரிய விளையாட்டுகளை காட்சிப்படுத்தியிருந்தனர். மேலும் தஞ்சை பெரிய கோவிலை பிரம்மாண்டமாக முப்பரிமாண வடிவில் காட்சிப்படுத்தியிருந்தனர். தமிழுக்கும் தஞ்சை கோவிலுக்குமான வியக்கவைக்கும் ஒற்றுமையை தெளிவாக விளக்கியிருந்தனர். மேலும் தமிழர்களின் விழாக்கள், பாரம்பரிய கலைகள், பாரம்பரிய இசைக்கருவிகள் என பலவிதமான தமிழ்ப் படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் நமது பாரம்பரிய உணவு தானியங்கள், வரலாற்றுச் சின்னங்கள், பெண்பாற்புலவர்கள், வீரப்பெண்மணிகள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் என தமிழார்வலர்கள் வியக்கும் வகையில் ஏராளமானவற்றை கண்காட்சியில் காண முடிந்தது. மாணவர்கள் கைவண்ணத்தில் உருவாக்கிய ஓவியங்கள், களிமண்ணால் உருவாக்கிய திருவள்ளுவர், பாரதியார் சிலைகள் போன்றவை வியக்க வைத்தது. தமிழுக்கென்று உருவாக்கப்பட்ட இந்த கண்காட்சி தமிழார்வலர்கள் பாராட்டைப் பெற்றுள்ளது.



தமிழ் கண்காட்சியில் செல்பி எடுத்து மகிழ்ந்த மாணவிகளை படத்தில் காணலாம்.



கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாரம்பரிய கலைகள்.

# Tamil Exhibition in Government School(16.02.2022)

சோமவாரப்பட்டி

## அரசு பள்ளியில் தமிழ் கண்காட்சி



▶ சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தமிழ் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிட்ட கல்லூரி மாணவிகள்.

**உடுமலை, பிப்.16:** உடுமலையை அடுத்த சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ் கண்காட்சி நடத்தி அனைவரையும் வியக்கவைத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், தலைமை ஆசிரியர் கோப்பெருந்தேவியின் முயற்சியால் ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் மாணவ-மாணவிகள் தமிழ் கண்காட்சி அமைத்துள்ளனர். இந்த கண்காட்சியை பொள்ளாச்சி எம்பி சண்முகசுந்தரம் தொடங்கி வைத்தார். நமது பாரம்பரிய விளையாட்டுகள், தமிழ் நூல்கள், கவிஞர்கள், ஐவகை நிலங்கள் என தமிழ் சார்ந்த பல விஷயங்களை கண்காட்சியில் காட்சிப்படுத்தினர். மாணவ-மாணவிகளின் படைப்புகள் பலவும் கண்ணையும் மனதையும் கவர்வதாக இருந்தது. இந்த கண்காட்சியை சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பள்ளி மாணவர்கள் மற்றும் உடுமலை அரசு கலைக்கல்லூரி, வித்யாசாகர் கல்லூரி மற்றும் ஜிவிஜி கல்லூரி மாணவிகள் கண்டு ரசித்தனர்.

# Refresher Training for Female Students(27.02.2022)

## மாணவிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி



புத்தாக்கப் பயிற்சி முகாமில்
உறுதிமொழி எடுத்துக் கொண்ட மாணவிகள்.

**உடுமலை, பிப். 27:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

உடுமலை வட்டம், தேவனூர்புதூர், ஜல்லிப்பட்டி, எலையமுத்தூர் மற்றும் மடத்துக்குளம் பகுதிகளைச் சார்ந்த அரசுப் பள்ளிகளில் பயிலும் 130 மாணவிகள் இதில் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் ந.ராஜேஸ்வரி வரவேற்றார். ஆலோசகர் ஜெ.மஞ்சுளா பேசினார். உயர் கல்வியில் கல்லூரிகளில் பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பது குறித்தும், அப்போது பெற்றோரிடம் மனம் விட்டு பேசுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் முகாமில் விளக்கிக் கூறப்பட்டது.

மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. அப்போது மாணவிகள் பல்வேறு விளக்கங்களை கேட்டுத் தெரிந்து கொண்டனர். மேலும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# Setting up of Vegetable Garden in Government School (1.03.2022)



## அரசுப்பள்ளியில் காய்கறித்தோட்டம் அமைக்கும் பணி

### கல்லூரி மாணவிகள் பங்கேற்பு

உடுமலை, மார்ச்.1-

உடுமலை பாரதியார் நூற்றாண்டு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நமது பசுமை பள்ளித்திட்டத்தின் கீழ் குறு காய்கறித்தோட்டம் அமைக்கும் பணி நடைபெற்றது.

ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவின் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்வுக்கு உடுமலை ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் மகாலட்சுமி முருகன், பாரதியார் நூற்றாண்டு மகளிர் பள்ளித் தலைமை ஆசிரியர் விஜயா ஆகியோர் தலைமை தாங்கினர். கல்லூரியின் தமிழ்த் துறை சுயநிதிப் பிரிவை சேர்ந்த மாணவிகள், பள்ளி வளாகத்தில் வெண்டை, அவரை, பாகல், முருங்கை, கொத்தவரை, கீரை, தக்காளி, பொரியல் தட்டை உள்ளிட்ட காய்கறிகளின் விதைகளை நடவு செய்து குறுந்தோட்டம் அமைக்கும் பணியினை மேற்கொண்டனர்.

இந்த காய்கறித்தோட்டத்தின் மூலம் கிடைக்கும் காய்கறிகளை மதிய சத்துணவுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தாங்களே விளைவித்த காய்கறிகளை தாங்களே உண்ணும் சந்தோஷம் மாணவிகளுக்குக் கிடைக்கும்.

அத்துடன் காய்கறித் தோட்டம் உருவாக்குவதில் ஆர்வம் ஏற்பட்டு வீடுதோறும் காய்கறித் தோட்டம் அமைப்பதன் மூலம் சத்தான, புத்தம் புதிய, ரசாயனக் கலப்பில்லாத காய்கறிகளை அனைவரும் பயன்படுத்தும் வாய்ப்பு உருவாகும். இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறை சுயநிதிப் பிரிவின் துறைத்தலைவர் பிருந்தா, ஆசிரியர்கள் ராஜேஸ்வரி, மணிமேகலை, ரம்யா, சத்யப்ரியா மற்றும் தமிழ்துறை மாணவிகள் இணைந்து செய்திருந்தனர்.

# NATIONAL SCIENCE DAY CELEBRATION (4.03.2022)

உடுமலையில்

## தேசிய அறிவியல் தினத்தையொட்டி நிலா திருவிழா

### மாணவிகள் உற்சாகத்துடன் பங்கேற்பு



தொலைநோக்கி மூலம் நிலவை கண்டு ரசித்த மாணவிகளை படத்தில் காணலாம்.

உடுமலை, மார்ச்.4-

உடுமலையில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிலா திருவிழாவில் மாணவிகள் உற்சாகமாக கலந்துகொண்டனர்.

#### நிலா திருவிழா

நிலாவில் ஒரு பாட்டி வடை சுட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற சுவாரசியமான கற்பனையில் தொடங்கி, நிலாவைக் காட்டி அமுதூட்டும் அன்னையின் அன்பு வரை நமது வாழ்வியலோடு நிலாவுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. தற்போது நிலவில் குடியேற திட்டமிடும் அளவுக்கு விஞ்ஞான வளர்ச்சியை எட்டியுள்ளோம். எனவே நிலா குறித்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அதனடிப்படையில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் விஞ்ஞான் பிரச்சார் நிறுவனம், அறிவியல் பலகை, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ஆகியவை சார்பில் தமிழ்நாடு முழுவதும் நிலா திருவிழா நடத்தப்பட்டது. அதன்படி உடுமலை கலிலியோ அறிவியல் கழகத்தின் சார்பில் உடுமலை ஸ்ரீ ஜீ.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி கணிதத்துறையுடன் இணைந்து நிலா திருவிழா நடைபெற்றது. நிகழ்வுக்கு வருகை தந்தவர்களை கணிதத்துறை பேராசிரியை கற்பக தேவி வரவேற்று பேசினார். உடுமலை சுற்றுச்சூழல் சங்கசெயலாளர் நாகராஜன் தலைமை தாங்கினார். கணிதத் துறை பேராசிரியை பரணிதா, விஜயலட்சுமி, கலிலியோ அறிவியல் கழக உறுப்பினர் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் நிலாவைப் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது.

#### நிலா கையேடு

நிலாவின் சுவாரசியமான தகவல்கள் பற்றியும், நிலவின் தன்மை, நிலவின் ஈர்ப்பு விசை, நிலவுக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்கள், நிலவின் வளிமண்டலம் மற்றும் நிலவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சிகள் பற்றிய பல்வேறு வினாக்களுக்கு உடுமலை கலிலியோ அறிவியல் கழக ஒருங்கிணைப்பாளர் கண்ணபிரான் விளக்கம் அளித்து மாணவிகளிடம் கலந்துரையாடினார். அப்போது இரவு பகல் ஏற்படுதல், அமாவாசை பவுர்ணமி, கிரகணங்கள் ஏற்படும் விதம் ஆகியவை பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. நிலா திருவிழாவுக்காக அறிவியல் பலகை மூலம், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவிகளுக்கும் நிலவைப் பற்றிய சுவையான தகவல்கள் அடங்கிய நிலா கையேடு வழங்கப்பட்டது.

தேய்பிறை, வளர்பிறை ஆகிய கருத்துக்களை விளக்கம் அளிக்கும் வகையில் மாணவிகள் மூலம் செயல்விளக்கம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரிய வானியல் நிகழ்வான வியாழன் மற்றும் வெள்ளி கோள்கள் இணையும் நிகழ்வினை மாணவிகள் பார்த்து மகிழ்ந்தனர்.

மேலும் நிலவின் மேற்பரப்பையும், நட்சத்திர தொகுதிகளையும் தொலைநோக்கி மூலம் கண்டு களித்து உற்சாகமடைந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கலிலியோ அறிவியல் கழக உறுப்பினர்கள் ஹரிணி, மதுஸ்ரீ, சதீஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# Women's Day Celebration (10.03.2022)

www.dinamalar.com
கோயம்புத்தூர்
• வெள்ளி • மார்ச் 10 2023
தினமலர் உடுமலை



■ உடுமலை நீதிமன்றத்தில், நடந்த மகளிர் தின விழாவில், கோலப்போட்டி நடந்தது. ■ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் இந்திய கூடைப்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் அனிதா பேசினார். ■ உடுமலை கிளை நூலகம் எண்–2ல், நடந்த விழாவில், பல்வேறு துறைகளில் சாதித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## மனதளவில் வலிமை வாய்ந்தவர்கள் மகளிர்!

### மகளிர் தின விழாவில் உற்சாகம்

**உடுமலை, மார்ச் 10–** உடுமலை நீதிமன்றம் மற்றும் பள்ளி, கல்லூரிகளில், உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

உடுமலை நீதிமன்றத்தில், நடந்த விழாவுக்கு, வட்ட சட்ட பணிகள் குழு தலைவர் மற்றும் சார்பு நீதிபதி மணிகண்டன் தலைமை வகித்தார். மாவட்ட உரிமையியல் **நீதிமன்ற நீதிபதி பாலமுருகன், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்–1 நீதிபதி விஜயகுமார், எண்–2, நீதிபதி மீனாட்சி முன்னிலை வகித்தனர்.**

விழாவையொட்டி, பெண்களுக்கு, நினைவு திறன் போட்டி, ஒரு சொல் இரு பொருள், ஓர் எழுத்து ஒரு பொருள், கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்துதல், பாட்டிலில் நீர் நிரப்புதல், லக்கி கார்னர், இசை நாற்காலி, கயிறு இழுத்தல், பலுான் உடைத்தல், கோலப் போட்டி என பல்வேறு வகையான விளையாட்டு போட்டிகள் மற்றும் பெண்கள், குழந்தைகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் என, நீதிமன்ற வளாகத்தில் மகளிர் தினம் களை கட்டியது. வக்கீல்கள் பங்கேற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

★ வித்யாசாகர் கலை அறிவியல் கல்லுாரியில் நடந்த விழாவுக்கு, முதல்வர் பிரபாகர் தலைமை வகித்தார். பேராசிரியர் ரேணுகா வரவேற்றார். சிறப்பு விருந்தினராக சித்தா டாக்டர் மகாராணி கலந்து கொண்டார். தொடர்ந்து, கவியரங்கம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பேராசிரியர்கள் ராஜலட்சுமி, ஹரிதேவி, ஸ்வர்ணகாந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

★ ஸ்ரீ விசாலாட்சி மகளிர் கல்லுாரியில், மகளிரியல் மையம் சார்பில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. கல்லுாரி இயக்குனர் மஞ்சுளா தலைமை வகித்தார். செயலாளர் சுமதி முன்னிலை வகித்தார். முதல்வர் ராஜேஸ்வரி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்தியக் கூடைப்பந்தாட்ட அணி முன்னாள் தலைவர் பத்மஸ்ரீ அனிதா பேசுகையில், "பெண்கள் உடல் மற்றும் மனதளவில் வலிமை வாய்ந்தவர்கள். வெற்றி இலக்கை அடைய பல தடைகள் வந்தாலும், அதனை தகர்த்து முன்னேற வேண்டும். கடின உழைப்பு, வெற்றியைத் தேடித் தரும்." என்றார். இதற்கான ஏற்பாடுகளை மகளிரியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் இணைப் பேராசிரியர் யமுனா மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

★ உடுமலை, கிளை நுாலகம் எண் 2ல், மகளிர் நுாலக வாசகர் வட்டம், தேஜஸ் ரோட்டரி சங்கம் சார்பில் மகளிர் தின விழா நடந்தது. நுாலகர் கலாவதி தலைமை, நுாலக வாசகர் வட்ட துணைத் தலைவர் சிவக்குமார், ஆலோசகர் அய்யப்பன் முன்னிலை வகித்தனர். வாசகர் வட்ட தலைவர் விஜயலட்சுமி, வரவேற்றார். பல்வேறு துறைகளில் சாதித்த, 30 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. தேஜஸ் ரோட்டரி சங்க தலைவர் பாபு, முன்னாள் தலைவர் நாகராஜ், தீபம் பெண்கள் அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் ஆண்டரோஸ் மேரி, முன்னாள் நுாலகர் கணேசன், கல்லுாரி உதவி பேராசிரியர் காமராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். நுாலகர் மகேந்திரன் நன்றி தெரிவித்தார்.

# Sports Day Celebration (15.03.2022)

தினகரன் திருப்பூர்

## ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா



ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவிகளுடன் கோவை என்சிசி கமாண்டிங் அதிகாரி ஜெயண்ட் மோகன் ஜோஷி மற்றும் கல்லூரி நிர்வாகிகள் உள்ளனர்.

**உடுமலை, மார்ச் 15:** உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் 71-வது விளையாட்டு தின விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கோவை தேசிய மாணவர் படை கமாண்டிங் அதிகாரி ஜெயண்ட் மோகன் ஜோஷி கலந்து கொண்டார். கல்லூரியின் செயலர் ஸ்ரீமதி சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார். இயக்குனர் மற்றும் ஆலோசகர் மஞ்சுளா விழாவில் பங்கேற்றார். முதல்வர் ராஜேஸ்வரி வரவேற்றார்.

விளையாட்டு தின ஆண்டறிக்கையை விளையாட்டுத்துறை இயக்குனர் சுஜாதா வாசித்தார். கல்லூரி தேசிய மாணவர் படை கேப்டன் மற்றும் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் கற்பகவல்லி தேசிய மாணவர் படையின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை வாசித்தார். கொடியேற்றத்துடன் துவங்கப்பட்ட விழாவில் மாணவியரின் கண்கவர் அணிவகுப்பு நடைபெற்றது.

மாணவியர் விளையாட்டு தின உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். மாணவிகளுக்கு 3000 மீட்டர், 2000 மீட்டர், 800 மீட்டர், 200 மீட்டர் உள்ளிட்ட தடகளப் போட்டிகள் நடைபெற்றன. மேலும் சிலம்பாட்டம், மாறுவேடப் போட்டி, யோகா போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

பேராசிரியர்களுக்கும் பார்வையாளர்களுக்கும், ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்களுக்கும், குழந்தைகளுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் கலந்துகொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டன. ஒட்டு மொத்த போட்டிகளுக்கான வெற்றி கோப்பையை நம்பிக்கை அணி தட்டிச் சென்றது. விளையாட்டுத் துறையின் மாணவச் செயலாளர் மேகா (மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல்)நன்றி கூறினார். விளையாட்டு ஏற்பாடுகளை விளையாட்டுத்துறை இயக்குனர் சுஜாதா செய்திருந்தார்.

# College Day Celebration (19.03.2022)




உடுமலை

## ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி தினவிழா

போடிப்பட்டி, மார்ச்.19–

உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் 71 – வது கல்லூரி தினவிழா நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராக கர்நாடக மாநிலம் பெங்களூரு ஐ.பி.எம்.நிறுவனத்தின் உலகளாவிய செயல்திட்ட மேலாளரும், நிர்வாகியுமான வைஜெயந்தி சீனிவாசராகவன் கலந்துகொண்டார். கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார். கல்லூரிப் பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் இயற்பியல் துறை இணை பேராசிரியருமான டி.வி.பானுமதி வரவேற்றுப் பேசினார். ஆலோசகரும் இயக்குனருமான முனைவர் ஜெ.மஞ்சுளா சிறப்பு விருந்தினருக்கு மலர்க்கொத்து, நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்தார்.

கல்லூரி முதல்வர் ந.ராஜேஸ்வரி கல்லூரியின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை வாசித்தார். மொழிப்பாடங்கள் மற்றும் முதன்மைப் பாடங்களில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு கேடயங்களையும், கல்லூரிப் பேரவையின் மாணவத் தலைவி, செயலர் மற்றும் துணைத்தலைவி ஆகியோருக்கும் தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டம், செஞ்சிலுவை சங்கம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், விளையாட்டுத் துறையின் செயலர்களுக்கும், கல்லூரியில் இயங்கி வரும் பல்வேறு மன்றங்களின் மாணவச் செயலாளர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களையும் சிறப்பு விருந்தினர் வழங்கி பேசினார். தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கல்லூரிப் பேரவையின் மாணவத் தலைவி எம்.ஹர்ஷினி நன்றி கூறினார்.

## உடுமலையில் கல்லூரி தின விழா




உடுமலை ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரி தின விழாவில் சிறந்த மாணவிகளுக்கு சான்றிதழ்களை பெங்களூரு ஐபிஎம் நிறுவனத்தின் உலகளாவிய செயல்திட்ட மேலாளர் வைஜெயந்தி வழங்கினார்.

உடுமலை, மார்ச் 20: உடுமலை ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி 71வது கல்லூரி தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கர்நாடக மாநிலம் பெங்களூரு ஐபிஎம் நிறுவனத்தின் உலகளாவிய செயல்திட்ட மேலாளர் வைஜெயந்தி சீனிவாச ராகவன் கலந்து கொண்டார். கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார். கல்லூரி பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் இயற்பியல் துறையின் இணை பேராசிரியருமான பானுமதி வரவேற்றார். ஆலோசகரும் இயக்குனருமான ஜெ.மஞ்சுளா சிறப்பு விருந்தினருக்கு மலர்க்கொத்து வழங்கியும் நினைவுப்பரிசு வழங்கியும் கௌரவித்தார்.

முதல்வர் ராஜேஸ்வரி கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையை வாசித்தார். மொழிப்பாடங்கள் மற்றும் முதன்மை பாடங்களில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு கேடயங்களையும், கல்லூரி பேரவையின் மாணவ தலைவி, செயலர் மற்றும் துணை தலைவி ஆகியோருக்கும், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டம், செஞ்சிலுவை சங்கம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், விளையாட்டு துறையின் செயலர்களுக்கும், கல்லூரியில் இயங்கி வரும் பல்வேறு மன்றங்களின் மாணவ செயலாளர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்களை சிறப்பு விருந்தினர் வழங்கினார். முடிவில் கல்லூரி பேரவை மாணவ தலைவி ஹர்ஷினி (மூன்றாமாண்டு விலங்கியல்) நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை கல்லூரி பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் இயற்பியல் துறையின் இணை பேராசிரியருமான பானுமதி மற்றும் பேரவை உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# Tamil Heritage Cultural Advocacy Program (23.03.2022)

## உடுமலை விசாலாட்சி கல்லூரியில்

# தமிழ் மரபு பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி

திருப்பூர், மார்ச் 23: திருப்
பூர் மாவட்ட கலெக்டர்
வினீத் வெளியிட்டுள்ள
செய்திக்குறிப்பில் கூறியி
ருப்பதாவது:

திருப்பூர் மாவட்டத்
தில் தமிழ் இணைய கல்விக்
கழகம் சார்பில் கல்லூரி
மாணவ-மாணவிகளுக்கு
தமிழ் கனவு, தமிழ் மரபு மற்
றும் பண்பாட்டு பரப்புரை
நிகழ்ச்சியில் உடுமலை
ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி
மகளிர் கல்லூரியில் நாளை
(24ம் தேதி) காலை 10.30
மணிக்கு நடைபெறுகி
றது. கவிஞர் நந்தலாலா
மற்றும் ஊடகவியலாளர்

**நாளை நடக்கிறது**

குணசேகரன் ஆகியோர்
சிறப்புரையாற்ற உள்ளனர்.

தமிழ் மரபின் வளமை
யையும், பண்பாட்டின்
செழுமையையும், சமூக
சமத்துவத்தையும் பொரு
ளாதார மேம்பாட்டுக்
கான வாய்ப்புகளையும்,
இளம் தலைமுறையின
ருக்கு கொண்டு செல்லும்
ஒரு முயற்சியாக இந்த
நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.
தமிழகம் முழுவதும் உள்ள
100 கல்லூரிகளில் தமிழர்
மரபும், நாகரிகமும், தமிழ
கத்தில் சமூக நீதி, பெண்கள்
மேம்பாடு மற்றும் சமூக
பொருளாதார முன்னேற்
றம் உள்ளிட்ட பல்வேறு
தலைப்புகளின் கீழ், சிறந்த
சொற்பொழிவாளர்களை
கொண்டு சொற்பொழிவு
நிகழ்ச்சிகள் நடைபெற உள்
ளது. மாவட்டத்தில் உள்ள
அரசு மற்றும் அரசு உதவி
பெறும் மற்றும் தனியார்
கலை மற்றும் அறிவியல்
கல்லூரிகள், பொறியியல்
கல்லூரிகள் உள்ளிட்ட
சொற்பொழிவு நடத்த அர
சின் மூலம் நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டுள்
ளது. இவ்வாறு கலெக்டர்
கூறியுள்ளார்.

# TAMIL LITERARY COMPETITION (28.03.2022)



தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

## கல்லூரி மாணவிகளுக்கு போட்டிகள்

திருப்பூர், மார்ச்.28–

திருப்பூர் மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் மாவட்ட அளவில் கல்லூரி மாணவ–மாணவிகளுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) இளங்கோ வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் எழிலி போட்டிகளை தொடங்கி வைத்தார்.

கவிதை போட்டியில் முதலிடத்தை சத்யபிரியா (திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி), 2–வது இடத்தை அபாரணி (அவினாசி அரசு மகளிர் கல்லூரி), மூன்றாம் இடத்தை சிவாத்தாள் (முத்தூர் கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி) ஆகியோர் வென்றனர். கட்டுரைப் போட்டியில் முதலிடத்தை கீதாஸ்ரீ (திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி), 2–வது இடத்தை முத்துலட்சுமி (திருமுருகன் பூண்டி ஏ.வி.பி.கலைக்கல்லூரி), 3–வது இடத்தை ஜெனிபர் (திருப்பூர் குமரன் கல்லூரி) ஆகியோர் பெற்றனர்.

பேச்சுப்போட்டியில் முதலிடத்தை விஷ்ணுபிரியா (உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரி), 2–வது இடத்தை விஜி (திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி), 3–வது இடத்தை பிருந்தா (திருப்பூர் சிக்கண்ணா அரசு கல்லூரி) ஆகியோர் வென்றனர். முதல் பரிசாக ரூ.10 ஆயிரம், 2–வது பரிசாக ரூ.7 ஆயிரம், 3–வது பரிசாக ரூ.5 ஆயிரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் கலெக்டர் மூலமாக வழங்கப்பட உள்ளது. முடிவில் கல்லூரியின் கவுரவ விரிவுரையாளர் நந்தினி நன்றி கூறினார்.

# District Level Elocution Competition(30.03.2022)

www.dinamalar.com
கோயம்புத்தூர்
• வியாழன் • மார்ச் 30 2023
தினமலர்
உடுமலை

## மாவட்ட பேச்சு போட்டி உடுமலை மாணவி முதலிடம்

**உடுமலை, மார்ச் 30–**

மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில், உடுமலை மாணவி முதலிடம் பெற்றார்.

திருப்பூர் மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை சார்பில், மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கான இலக்கிய போட்டி எல்.ஆர்.ஜி., மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி துணை இயக்குனர் இளங்கோ வரவேற்றார். எல்.ஆர்.ஜி., கல்லூரி முதல்வர் எழிலி போட்டிகளை துவக்கிவைத்தார். மாணவ, மாணவியருக்கு கவிதை, கட்டுரை பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டன.

கவிதை போட்டியில், திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி மாணவி சத்தியபிரியா முதலிடம்; அவிநாசி அரசு கலை அறிவியல் கல்லூரி மாணவி பரணி இரண்டாமிடம்; முத்தூர் கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி மாணவி சிவாத்தாள் மூன்றாமிடம் பிடித்தனர்.

கட்டுரை போட்டியில், எல்.ஆர்.ஜி., கல்லூரி மாணவி கீதாஸ்ரீ முதலிடம்; பூண்டி ஏ.வி.பி., கல்லூரி மாணவி முத்துலட்சுமி இரண்டாமிடம்; குமரன் மகளிர் கல்லூரி மாணவி ஜெனிபர் ஜாஸ்மின் மூன்றாமிடம்.

பேச்சுப் போட்டியில், உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரி மாணவி விஷ்ணுப்பிரியா முதலிடம்; குமரன் கல்லூரி மாணவி விஜி இரண்டாமிடம்; சிக்கண்ணா கல்லூரி மாணவி பிருந்தா மூன்றாமிடம் பிடித்தனர்.

போட்டிகளில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய்; இரண்டாமிடம் பிடித்தோருக்கு ஏழாயிரம் ரூபாய்; மூன்றாமிடம் பிடித்தோருக்கு ஐந்தாயிரம் ரபாய் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

# The Greatest Acknowledgment: Participation in Parlement Inauguration

## 'மிகப்பெரிய அங்கீகாரம்'



''வரலாற்று சிறப்பு மிக்க இந்த நிகழ்வில், ஐந்து ஓதுவார்களுடன் சேர்ந்து பாடியது மகிழ்ச்சி. எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது பெருமையாக உள்ளது. தமிழுக்கும், ஓதுவார்களுக்கும் முன்னுரிமை அளித்து, வாய்ப்பு வழங்கியது மிகப்பெரிய அங்கீகாரம்.

— உமா நந்தினி,
பெண் ஓதுவார்,
உடுமலைப்பேட்டை.

# College Day Celebration(09.06.2022)

## ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் கல்லூரி நாள் விழா




**உடுமலை, ஜூன் 9:** உடுமலையில் உள்ள ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் கல்லூரி நாள் கொண்டாடப்பட்டது. கல்லூரி செயலர் கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார். கல்லூரியின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் லட்சுமி வரவேற்றார். செயலர் சுமதி கிருஷ்ண பிரசாத் சிறப்பு விருந்தினரை கவுரவித்தார்.

கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக சிஎஸ்ஐஆர் மத்திய லெதர் ஆய்வு கல்வி நிலையத்தின் முதல்வர் விஞ்ஞானி குணலட்சுமி பங்கேற்று சிறப்புரையாற்றினார். தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் விளக்கினார். தொழில் முனைவோருக்கு 3டி பிரிண்டிங் தொடர்பான உதவிகளை வழங்குவதாக கூறினார்.

போட்டிகளில் வென்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடந்தது. முடிவில் கல்லூரியின் மாணவர் மன்ற தலைவி பூர்ணாஸ்ரீ நன்றி கூறினார்.

# NEET Exam Center (18.07.2022)

## சுமுகமாக நடந்து முடிந்தது 'நீட்' தேர்வு; 69 பேர் 'ஆப்சென்ட்'

**உடுமலை, ஜூலை 18–**

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த நீட் தேர்வு மையத்தில், 864 பேர் அனுமதிக்கப்பட்டனர். இதில், 69 பேர் தேர்வெழுத வரவில்லை; விதிமுறை மீறலால், ஒரு மாணவிக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி உட்பட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான 'நீட்' தேர்வு, தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.,) சார்பில் நேற்று நடந்தது.



▪ உடுமலை ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரியில், காலில் அடிபட்டு 'நீட்' தேர்வு எழுதவந்த மாணவியை, வீல் சேரில் அழைத்து செல்லும் ஊழியர்கள். ▪ 'நீட்' தேர்வு எழுதுவதற்காக வரிசையில் நிற்கும் மாணவியர்.

திருப்பூர் மண்டலத்தில் பெருமாநல்லூரார் கே.எம்.சி., பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளி, திருமுருகன் பூண்டி ஏ.வி.பி., கலை அறிவியல் கல்லூரி, உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரி, விஜயமங்கலம் சசூரி இன்ஜி., கல்லூரி, கோபி கலை அறிவியல் கல்லூரி உள்ளிட்ட, 5 மையங்களும், கோவை மண்டல கட்டுப்பாட்டின்கீழ், கூலிபாளையம் வித்யாசாகர் பப்ளிக் பள்ளியிலும் மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

திருப்பூரில் தேர்வை ஒருங்கிணைத்து நடத்தி முடிக்கும் பொறுப்பு, கே.எம்.சி., பப்ளிக் பள்ளிக்கு, என்.டி.ஏ., வழங்கி இருந்தது. மாவட்டத்தில், 3 ஆயிரத்து, 160 பேர் தேர்வெழுத அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த நீட் தேர்வு மையத்தில், 864 பேர் அனுமதிக்கப்பட்டனர். அவ்வகையில் காலை, 11:00 மணி முதலே, மாணவர்கள் மையத்திற்கு வரத்துவங்கினர். இதில், 69 பேர் தேர்வு எழுத வரவில்லை. ஒரு மாணவி, மொபைல் போன் எடுத்து வந்ததால், விதிமுறைகளின்படி, தேர்வெழுத அனுமதிக்கப்படவில்லை.

தண்ணீர் பாட்டில், 50 மி.லி., சானிடைசர் பாட்டிலை மட்டுமே தேர்வறைக்குள் எடுத்துச் சென்றனர். முகக்கவசம் அணியாதவர்களுக்கு, 'என் 95' முகக்கவசம் வழங்கப்பட்டது.

சமூக இடைவெளி கருதி ஒவ்வொரு அரை மணி நேரத்துக்கும், ஒரு குழு என்ற முறையில் மாணவர்கள் வரவழைக்கப்பட்டு அடையாள அட்டை, ஹால் டிக்கெட், பரிசோதனை செய்யப்பட்டது. 'தெர்மல் ஸ்கேன்' வாயிலாக, உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டது. காலில் காயம் காரணமாக சிகிச்சையில் இருந்த மாணவி ஒருவர், 'வீல் சேரில்' தேர்வு எழுத வந்து, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

மதியம், 1:30 மணி வரை தீவிர பரிசோதனைக்கு பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பின், 2:00 மணிக்கு துவங்கிய தேர்வு, மாலை 5:20 மணி வரை நடந்தது. அதுவரை, பெற்றோர் தங்களுக்கு அமைக்கப்பட்ட காத்திருக்கும் பகுதியில் இருந்தனர்.

வெளிப்புற வளாகத்தில் கூட்டம் சேராதபடி, காவல்துறையினர், போக்குவரத்து போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும், 'மைக்' வாயிலாக அறிவிக்கப்பட்டு, மாணவர்களை உள்ளே அனுமதிக்கப்பட்டதால் நெரிசலுக்கு வாய்ப்பின்றி, சுமுகமாக நடந்து முடிந்தது.

அரசு பள்ளி 'நீட்' ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் கூறுகையில், ''திருப்பூர் மாவட்டத்தில் மட்டும், அரசுப்பள்ளிகளில் படித்த, 464 மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், 7.5 சதவீத ஒதுக்கீடு காரணமாக கடந்த முறையை காட்டிலும், 150 பேர் கூடுதலாக எழுதினர்,'' என்றார்.

மாவட்ட நீட் ஒருங்கிணைப்பாளர் கே.எம்.சி., பள்ளி முதல்வர் நாகமணி கூறுகையில், ''மையங்கள் வெகு தொலைவில் அமைக்கப்பட்டு வந்த நிலையில், நடப்பாண்டு திருப்பூரில் ஆறு மையங்கள் அமைக்கப்பட்டதால் மாணவர்கள், பெற்றோர்கள் சிரமமின்றி எளிமையாக தேர்வு எழுதினர்.

மையம் அருகில் அமைந்ததால் தான், ஆதார் கார்டை தவறவிட்டவர்களும் கடைசி நிமிடத்தில் தேர்வு எழுத முடிந்தது. காய்ச்சல் அறிகுறி காரணமாக யாரும் தனியறையில், தேர்வெழுத அனுமதிக்கப்படவில்லை,'' என்றார்.

# Selection for Independence Day Parade

# (29.07.2022)



டெல்லி சுதந்திர தினவிழாவில் பங்கேற்க

## ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரி மாணவி தேர்வு

உடுமலை, ஜூலை.29–

அடுத்தமாதம் (ஆகஸ்டு) 15–ந்தேதி டெல்லியில் 75–வது சுதந்திரதின விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து வருகிறது. இதையொட்டி அணிவகுப்பை பிரம்மாண்டமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இந்த சுதந்திர தினவிழா அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு அனைத்து மாநிலங்களில் இருந்தும் மாணவ–மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

டெல்லியில் நடைபெற உள்ள சுதந்திர தினவிழா அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கு உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் 3–ம் ஆண்டு ஆங்கில இலக்கியம் படிக்கும் தேசிய மாணவர் படை மாணவி ஆர்.அபர்ணா மற்றும் தேசிய மாணவர்படை ஒருங்கிணைப்பாளராக இந்த கல்லூரியின் வரலாற்றுத்துறை பேராசிரியையான தேசிய மாணவர் படை அலுவலர் பி.கற்பகவள்ளி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் காருண்யா பல்கலைக்கழகத்தில் பயிற்சி முடிந்து இன்று (வெள்ளிக்கிழமை) கோவையில் இருந்து டெல்லிக்கு புறப்படுகின்றனர். இவர்கள் இருவரையும் உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி செயலாளர் சுமதிகிருஷ்ணபிரசாத், இயக்குனர் ஜெ.மஞ்சுளா, முதல்வர் என்.ராஜேஸ்வரி மற்றும் பேராசிரியைகள் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

# Independence Day Celebration: Awareness Rally (13.08.2022)

## சுதந்திர தின அமுதப்பெருவிழா மாணவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

**உடுமலை, ஆக. 13–** உடுமலையில், சுதந்திர தின அமுதப்பெருவிழா விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

உடுமலையில், மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், 'பிட் இந்தியா', ஸ்கில் இந்தியா ஆகிய அமைப்புகளின் சார்பில், சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழா, விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. வித்யாசாகர் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

பிரதான வீதிகள் வழியாக வந்த ஊர்வலம், குட்டைத்திடல் காந்தி சிலை அருகே நிறைவுற்றது. இதில், சுதந்திர தின அமுத பெருவிழாவை, உற்சாகமாக கொண்டாடுவது மற்றும் வீடுகள் தோறும் தேசிய கொடி ஏற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, ஜி.வி.ஜி., கல்லூரியில், அமுதப்பெருவிழா கருத்தரங்கம் நடந்தது.

இதில் பங்கேற்ற, பா.ஜ., கட்சியின் வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு மாநில தலைவர் காயத்ரி ரகுராம், கூறுகையில், '' சுதந்திரம் பெற்று, 75 ஆண்டுகள் அமுதப் பெருவிழாவில், நாம் வாழ்ந்து வருகிறோம், என பெருமை கொள்வோம். தேசப்பற்றுடன், தீபாவளி, பொங்கல், ஹோலிப்பண்டிகை போல், சுதந்திர தின விழாவையும் உற்சாகமாக கொண்டாட வேண்டும். வீடுகள், வணிக நிறுவனங்களில், தேசியக்கொடி ஏற்றியும், சுதந்திரத்திற்காக போராடி, உயிர் நீத்த தியாகிகளை வணங்குவோம்,'' என்றார்.



உடுமலையில், சுதந்திர தின அமுதப்பெருவிழா விழிப்புணர்வு ஊர்வலத்தில் பங்கேற்ற கல்லூரி மாணவர்கள்.



விழாவில் மாணவிகளுடன் சேர்ந்து நடனமாடிய நடிகை காயத்ரி ரகுராம்.

### எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது:

## அடுத்தவர்களின் விமர்சனங்களை பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்

## நடிகை ஆர்.காயத்ரி ரகுராம் பேச்சு

உடுமலை, ஆக.13- விமர்சனங்களை பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உடுமலை கல்லூரியில் நடந்த சுதந்திர தின அமுத பெருவிழாவில் நடிகை ஆர். காயத்ரி ரகுராம் பேசினார்.



விழாவில் நடிகை ஆர்.காயத்ரி ரகுராம் பேசிய போது எடுத்த படம்.

**சுதந்திர தின அமுதப்பெருவிழா**

பிட் இந்தியா, ஸ்கில் இந்தியா மற்றும் உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி நுண்கலை மன்றம் ஆகியவற்றின் சார்பில் 75-வது சுதந்திர தின அமுதப்பெருவிழா கல்லூரி கூட்ட அரங்கில் நடந்தது. கல்லூரி முதல்வர் நடராஜேஸ்வரி தலைமை தாங்கினார். கல்லூரியின் நுண்கலை மன்ற உறுப்பினரான பேராசிரியை பிஜூலா ஆக்னஸ் வரவேற்றார். ஸ்கில் இந்தியா ஒருங்கிணைப்பாளர் மங்கலம் என்.ரவி, முன்னாள் நகராட்சி தலைவர் ஜோதீஸ்வரி கந்தசாமி, உடுமலை தேஜஸ் ரோட்டரி சங்கத்தலைவர் பி.சத்யம்பாபு, எரிசனம்பட்டி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் உமாராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுற்றுப்புற ஆர்வலர் டி.மலர் கொடி வாழ்த்துரை வழங்கினார். சுதந்திர இந்தியாவில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் நடிகை ஆர். காயத்ரி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வீடுகளில் தேசிய கொடியை ஏற்றி சுதந்திர தினவிழாவை கொண்டாடுங்கள் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார். அதன்படி சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அர்ப்பணிக்கும் வகையில் வீடுகளில் தேசிய கொடியை ஏற்றி சுதந்திர தின விழாவை கொண்டாடுங்கள்.

**திருப்திப்படுத்த முடியாது**

ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருக்க வேண்டும். மற்றவர்களை எதிர்பார்த்து இருக்கக்கூடாது. அப்படி நீங்கள் சுதந்திரமாக இருந்தால் உங்களை யாரும் கேள்வி கேட்க முடியாது. இப்போது இந்தியா டிஜிட்டல் இந்தியாவாக மாறியுள்ளது. இதை நல்ல விதத்தில் பயன்படுத்துங்கள். நீங்கள் அனைவரும்தான் இந்தியாவின் எதிர்காலம். விமர்சனங்களை பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. சில விஷயங்களை பெற்றோரிடம் பரிமாறலாம். சில விஷயங்களை நண்பர்களிடம் பரிமாறலாம். நான் அரசியலுக்கு வருவேன். பிரதமர் மோடியை சந்திப்பேன் என்று நினைத்து பார்த்ததில்லை. எனக்கு நடிப்பதை விட நடனத்தில்தான் ஆர்வம்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அவர் கையில் தேசிய கொடியுடன், மாணவிகளுடன் நடனமாடினார்.

# Drug Eradication Awareness Marathon(15.08.2022)

### உடுமலையில்

## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

உடுமலை, ஆக.15—

உடுமலையில் தமிழ்நாடு காவல்துறை சார்பில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் மாரத்தான் போட்டி நடந்தது.குட்டை திடலில் தொடங்கிய மாரத்தான் போட்டியை சுதந்திர தின ஜோதி ஏற்றி உடுமலை டிஎஸ்பி. தேன்மொழிவேல் துவக்கி வைத்தர்ர் . மொத்தம் 2500 பேர் கலந்து கொண்ட இந்த போட்டியில் ஆண்கள் பிரிவில் தீபக் முதல் இடத்தையும் ,கண்ணன் இரண்டாவது இடத்தையும், மனோஜ் குமார் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். பெண்கள் பிரிவில் அருணா முதல் இடத்தையும் ,கிருத்திகா இரண்டாவது இடத்தையும் ,சாதனா மூன்றாவது இடத்தையும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்றவர்களுக்கு ஏ. டி .எஸ். பி. ஜான்சன் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

தொடர்ந்து போட்டியில் பங்கேற்ற 25 பேருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காவல்துறை மற்றும் ரோட்டரி தேஜஸ் ரோட்டரிதலைவர் சத்யம்பாபு,முன்னாள் முதல்வர் நாகராஜ் ,முன்னாள் செயலாளர் போதி ராஜ் செய்திருந்தனர்.

# Table Tennis Tournament (19.08.2022)

# குறுமைய டேபிள் டென்னிஸ் போட்டி

## அரசு பள்ளி மாணவியர் அபாரம்

**உடுமலை, ஆக. 19–**

குறுமைய அளவிலான டேபிஸ் டென்னிஸ் போட்டியில், பூளவாடி அரசுப்பள்ளி மாணவியர் அதிக இடங்களில் வெற்றி பெற்றனர்.

உடுமலை குறு மைய அளவிலான மாணவியர் டேபிள் டென்னிஸ் போட்டி, ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரியில் நடந்தது.

போட்டியை உடுமலை கல்வி மாவட்ட அலுவலர் பழனிசாமி துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி உடனிருந்தார்.

14 வயது தனிநபர் பிரிவில், பூளவாடி அரசு மேல்நிலைப்பள்ளி அயணா முதலிடம், கடத்துார் அரசுப்பள்ளி ஹரிணி இரண்டாமிடம்; இரட்டையர் பிரிவில், பூளவாடி அரசு பள்ளி அயணா, தர்ஷனா ஜோடி முதலிடம், பெதப்பம்பட்டி ஆர்.ஜி.எம்., பள்ளி சதுர்த்யா, ஆதிரா ஜோடி இரண்டாமிடம்.

17 வயது தனிநபர் பிரிவில், உடுமலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி பிரதீபா முதலிடம், எஸ்.கே.பி., தாரணி இரண்டாமிடம்.

இரட்டையர் பிரிவில், பூளவாடி அரசுப்பள்ளி யுதிகாஸ்ரீ, கார்த்திகா ஜோடி முதலிடம், எஸ்.கே.பி., தாரணி, ஹர்சினி ஜோடி இரண்டாமிடம்.

19 வயது தனிநபர் பிரிவில், பூளவாடி அரசுப் பள்ளி சாதனா முதலிடம், சீனிவாசா வித்யாலயா ஸ்ரீநிஷா இரண்டாமிடம். இரட்டையர் பிரிவில், பூளவாடி அரசு பள்ளி சாதனா, பிரமேலதா ஜோடி முதலிடம் வென்றனர்.




ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரியில் நடந்த, குறுமைய அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டியில், தேவனுார்புதுார் அரசு மேல்நிலைப்பள்ளி அணியும், பெதப்பம்பட்டி ஆர்.ஜி.எம்., மேல்நிலைப்பள்ளி அணியும் மோதின.

# Seed Ganesh Preparation (30.08.2022)



www.dinamalar.com
கோயம்புத்தூர்
செவ்வாய் ஆகஸ்ட் 30 2022

உடுமலை

## விதை விநாயகர் தயாரிப்பு

### அசத்தும் மாணவியர்

**உடுமலை, ஆக. 30-** சுற்றுச் சூழலையும், நீர்நிலைகளையும் பாதுகாக்கும் வகையில் 'விதை விநாயகரை' தயாரித்து, கல்லூரி மாணவியர் அசத்தினர்.

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, நகரின் பல பகுதிகளில் சிலைகள் பிரதிஷ்டைக்காக வைக்கப்பட்டுள்ளன. வீடுகளிலும் வழிபாடு நடத்த மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வரிசையில், விதை விநாயகர்கள் தயாரிக்கும் பணியில், ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லுாரி மாணவியர் அசத்தியுள்ளனர்.

நேற்று, அக்கல்லுாரியில், பசுமை ஆக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மன்றம், நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் விதை விநாயகர் வடிவமைப்பு பயிற்சி வகுப்பு நடந்தது. இதில், நுாற்றுக்கும் மேற்பட்ட மாணவியர் கலந்து கொண்டனர்.

அதில், களிமண்ணால் விநாயகர் சிலைகளை தயாரித்து, நவ தானியங்களை விதைத்துள்ளனர்.

மாணவியர் கூறியதாவது: 'பிளாஸ்டர் ஆப் பாரீஸ்', செயற்கை வர்ணங்களைப்பூசிய சிலைகளை வடிவமைத்து, தண்ணீரில் கரைத்தால் நீர் நிலைகள் பாதிக்கும்.

அதற்கு மாறாக, களிமண்ணால் விநாயகர் சிலை செய்து, அவை நன்றாக காய்ந்தவுடன், சிறிய துளையில் நவ தானியங்கள் செலுத்தப்படுகிறது. குறிப்பாக, நெல், கோதுமை, பாசிப்பயறு, கம்பு, சோளம், ராகி உள்ளிட்டவற்றை ஒரு கைப்பிடி அளவுக்கு ஒவ்வொரு சிலையிலும் செலுத்தி அடைக்கப்படுகிறது.

இந்த சிலைகள் தண்ணீரில் போட்டவுடன் எளிதில் கரைந்துவிடும். அதில் உள்ள நவதானியங்கள், நீர்வாழ் உயிரினங்களுக்கு உணவாகி விடும்.

ஒருவேளை கரை ஒதுங்கி செடியாக வளர்ந்தாலும், அதில் உருவாகும் புழுக்கள் உள்ளிட்டவை நீர்வாழ் உயிரினங்களுக்கு உணவாக இருக்கும். நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. மண் வளம் பாதுகாக்கப்படும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

உடுமலை ஜி.வி.ஜி., மகளிர் கல்லுாரியில், விநாயகர் சதுர்த்தியையொட்டி களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளுடன் மாணவியர்.

# Part Time Job for students (3.09.2022)

## மாணவியருக்கு பகுதி நேர வேலை

**உடுமலை, செப். 3–**

உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், தனியார் நிறுவனம் வாயிலாக பட்டப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவியர், கற்றல் சார் திறன் மேம்பாடு அடையும் வகையில் ஆங்கில வினாக்களைத்தமிழில் மொழி பெயர்த்து வருமானம் ஈட்ட வகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, விலங்கியல், இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் வணிகவியல் சார்ந்த பாடத்திட்டங்கள் குறித்த ஆங்கில வினாக்களை, தமிழில் மொழி பெயர்க்கின்றனர். இதற்கு, தேவையான பயிற்சியும், தரமான வினாக்களை தொகுக்கும் மாணவியருக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.



உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், தனியார் நிறுவனம் வாயிலாக பட்டப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலை வாய்ப்புகளை பெறுவதற்கான பயிற்சி நடந்தது.

# ONAM CELEBRATION (10.09.2022)

## ஓணம் கொண்டாட்டம்



**உடுமலை, செப். 10–**

உடுமலை ஸ்ரீ விசாலாட்சி மகளிர் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது. விழாவில், கல்லூரிச் செயலாளர் சுமதி, ஆலோசகர் மஞ்சுளா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் ராஜேஸ்வரி, குத்து விளக்கு ஏற்றி விழாவைத் துவக்கி வைத்தார்.

மாணவியர், மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்கும் விதமாக பூக்கோலமிட்டு, நடனமாடினர். இதற்கான ஏற்பாடுகளை, கல்லூரி பேரவை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பானுமதி, தமிழ்த் துறைத் தலைவர் வசுமதி, கல்லூரி பேரவைத் தலைவர் ஹர்சினி ஆகியோர் செய்திருந்தனர்.

# ATIONAL ATHLET WON SILVER MEDAL(14.09.2022)



தினகரன் திருப்பூர்

## தேசிய தடகள போட்டியில் ஜிவிஜி கல்லூரி மாணவி சாதனை

உடுமலை, நவ. 17: உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் முதலாம் ஆண்டு பிபிஏ படித்து வருபவர் வைஷாலி. இவர் அசாம் மாநிலத்தில் நடைபெற்ற 37வது தேசிய அளவிலான ஜூனியர் தடகள போட்டியில் வெண்கலமும், 4, 100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளார்.

வெற்றி பெற்ற மாணவியை கல்லூரி செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத், ஆலோசகர் மஞ்சுளா, கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி, உடற்கல்வி இயக்குநர் சுஜாதா மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

தடகள போட்டியில் சாதனை படைத்த மாணவி வைஷாலி.

# Awareness Meeting on Skill Development Training (22.11.2022)



## திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்து விழிப்புணர்வு கூட்டம்

உடுமலை, நவ.22: உடுமலை ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறையின் சார்பாகதிறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கல்லூரியின் வணிகவியல் துறை தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வங்கி, நிதிசேவை காப்பீட்டுத்துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் மற்றும் அதற்குத் தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. கல்லூரியின் செயலர் ஸ்ரீமதி சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர்ராஜேஸ்வரி தலைமை தாங்கினார். வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் லக்ஷ்மி வரவேற்றார். தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குனர் அஜய் மற்றும் கல்வி ஆலோசகர் ராமச்சந்திரன் ஆகியோர் மாணவிகளுக்கு சிறந்த முறையில் திறன் மேம்பாடு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் வணிகவியல் துறை பேராசிரியர்களும், 500க்கும் மேற்பட்ட வணிகவியல் மற்றும் துறை சார்ந்த மாணவிகளும் கலந்துகொண்டு பயனடைந்தனர். வணிகவியல் துறை இணை பேராசிரியர் முனைவர் கலாவதி நன்றி கூறினார்.

# Legal Awareness Camp (25.11.2022)



## சட்ட விழிப்புணர்வு முகாம்

உடுமலை, நவ.25-

உடுமலை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில், ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் கணினி பயன்பாட்டுதுறை மற்றும்டாக்டர் அப்துல் கலாம் மக்கள் பாதுகாப்புசேவை அறக்கட்டளை இணைந்து கணினி பயன்பாட்டு துறையின் விரிவான விளக்கம், சட்ட விழிப்புணர்வு மற்றும்காவலன் உதவி செயலி குறித்த முகாம்பாலப்பம்பட்டி அருகே உள்ள தனியார் நிறுவனத்தில் நடைபெற்றது. முகாமிற்கு உடுமலை வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரான சப்-கோர்ட்டு நீதிபதி எம்.மணிகண்டன் தலைமைதாங்கி, சட்ட விழிப்புணர்வு குறித்து பேசினார்.

முகாமில் வக்கீல்கள் மகாலட்சுமி, சத்தியவாணி, தம்பி பிரபாகரன், உடுமலை அனைத்து மகளிர் போலீஸ் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் ருக்மணி,, மடத்துக்குளம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சண்முகசுந்தரம் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் பேசினர்.

முகாமை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறை தலைவர் மற்றும் இணை பேராசிரியர் கே.மணிமேகலை, உதவி பேராசிரியர்கள் வி.வடிவு, ச.சியாமளா, த. மோகன துர்கா மற்றும் 3-ம் ஆண்டு மாணவிகள் ஒருங்கிணைந்து நடத்தினர்.

# Seminar on Development of Indian Economic through Internet (27.12.2022)

## இந்திய பொருளாதார கருத்தரங்கம் கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்பு

**உடுமலை, டிச. 27–**

உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், ஐ.சி.எஸ்.எஸ்.ஆர்., நிதியுதவியுடன், 2047ல், இந்திய பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் இணையத்தின் பங்கு' என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரிச்செயலாளர் சுமதி தலைமையில், கல்லூரி இயக்குனர் மஞ்சுளா முன்னிலை வகித்தார். முன்னதாக, பொருளியல் துறைத்தலைவர் ராதா, வரவேற்றார். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி பேசினார்.

சிறப்பு விருந்தினராக, மும்பை எஸ்.ஐ.எப்.ஏ., நிறுவன இயக்குனர் சையது இஸ்மாயில் கலந்து கொண்டு, விவசாயம், உற்பத்தி, பகிர்வு, வியாபாரம் மற்றும் சுகாதாரத்துறையில் இணையத்தின் பங்கு குறித்து பேசினார்.



■ உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், இந்திய பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் இணையத்தின் பங்கு' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

இதேபோல, முதல்நாள் கருத்தரங்கில், ஈரோடு கலை அறிவியல் கல்லூரி பொருளியல் துறைத் தலைவர் மணி, மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரி இணைப்பேராசிரியர் அண்ணாதுரை, மதுரா கல்லூரி துணைப்பேராசிரியர் கார்த்திகேயன் ஆகியோர் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் பணிகளில் இணையத்தின் பங்கு குறித்து பேசினர்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில், பெரியார் ஈ.வெ.ரா., கல்லூரி துணைப்பேராசிரியர் பரமசிவன், ஒஸ்மானியா பல்கலை துணைப்பேராசிரியர் கப்பா கொண்டல், ஜி.டி.என்., கல்லூரி பொருளியல் துறைத்தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

பொறுப்பு முதல்வர் கலைச்செல்வி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். அமைப்பு செயலாளர் மெஹர்பானு நன்றி கூறினார்.

# English Language Training for Government school student (5.01.2023)

## அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி



துங்காவி அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி அளித்த ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி கல்லூரி மாணவிகள், ஆசிரியர்கள்.

உடுமலை, ஜன.5: உடுமலை அமராவதி நகரில் 'நம்ம பள்ளி' திட்டத்தின் கீழ், ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி ஆங்கிலத் துறை மாணவிகள் மற்றும் டாக்டர் அப்துல்கலாம் மக்கள் பாதுகாப்பு சேவை அறக்கட்டளை சார்பில், துங்காவி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, 'வாக் இன் இங்கிலீஷ், டாக் இன் இங்கிலீஷ் என்ற இலவச ஆங்கில பயிற்சி அளிக்கப்பட்டது. எளிய முறையில் ஆங்கில இலக்கணமும், பிரச்னைகளை எதிர்கொள்வது எப்படி என்கிற தலைப்பில் விழிப்புணர்வு நாடகமும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் உடுமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் மகாலட்சுமி, துங்காவி அரசு பள்ளி தலைமை ஆசிரியர் அழகுமலை கண்ணன், ஆசிரியை வெண்ணிலா, கல்லூரி ஆங்கிலத்துறை பேராசிரியைகள் கவிதா, சுசிலா மற்றும் அப்துல்கலாம் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.